# புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை
**முன்னிலை : முனைவர் நா.அருள்முருகன்**

ந.க.எண் 612 – ஆ4 – 2013, நாள் 24.03.2014

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – புதுக்கோட்டை மாவட்டம் - அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் (முதுகலை ஆசிரியர்கள்) தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் செய்தது – தற்காலிக ஆசிரியர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.5000/- வீதம் 7 மாதங்களுக்கு நிதிஒதுக்கீடு வழங்கியது - மீத தொகையினை கருவூலகத்தில் சார்பு செய்த விவரம் கோருதல் - சார்பு.

பார்வை : 01. சென்னை. பள்ளிக் கல்வி இயக்குநர் நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 72276-பி1-இ2-20013, நாள் 28.01.2014.

02. இவ்வலுவலக இதே எண் நாள் 12.02.2014

***

பார்வை 1ல் காணும் நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகளின் படி பார்வை 2ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின் படி தற்காலிக தொகுப்பூதிய அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் நியமனம் செய்து கொள்ள அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் காலியாகவுள்ள 144 முதுகலை ஆசிரியர் பணியிடத்தில் தற்காலிகமாக பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமனம் செய்யப்பட்ட முதுகலை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.5000- (ரூபாய் ஐந்து ஆயிரம் மட்டும்) வீதம் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பிக் கொள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தொகுப்பூதியம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக முதுகலை ஆசிரியர்களுக்காக கருவூலகத்தில் பெறப்பட்ட தொகைக்கான விவரம் அல்லது 7 மாதங்களுக்கான தொகையை பெற்றிருப்பின் அதன் விவரம் (பெ.ஆ.க வங்கி புத்தகத்தின் நகலுடன்) தற்காலிக ஆசிரியர் பணியேற்ற நாள் முதல் பணிவிடுவிக்கப்பட்ட நாள் வரை கணக்கிட்டு தொகை வழங்கப்பட்டு பின்னர் மீதத் தொகையினை அரசுக் கணக்கில் சலான் மூலம் செலுத்திட வேண்டும். அதன் விவரம் மற்றும் மீதத் தொகையினை அரசுக் கணக்கில் வரவு வைத்த விவரங்களை கீழ்க்கண்ட படிவத்தில் பூர்த்தி செய்து 25.03.2014 மாலைக்குள் முதன்மைக் கல்வி அலுவலத்தில் சம்மந்தப்பட்ட பிரிவு எழுத்தரிடம் வழங்கிடுமாறு சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இது மிக மிக அவசரம்**

முதன்மைக் கல்வி அலுவலர்,
புதுக்கோட்டை

இணைப்பு : முகப்பு கடிதம் மற்றும் படிவம்.

பெறுநர்: சம்மந்தப்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.
நகல் : மாவட்டக் கல்வி அலுவலர், புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி.

அனுப்புநர்

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
புதுக்கோட்டை

ந.க.எண் / / 2013 நாள் . 03 . 2014

அய்யா,

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – புதுக்கோட்டை மாவட்டம் - அரசு உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் தற்காலிக (முதுகலை) ஆசிரியர்கள் நியமனம் செய்தது – தற்காலிக ஆசிரியர்களுக்கு தொகுப்பூதியம் நிதிஒதுக்கீடு பெற்று வழங்கியது - மீத தொகையினை கருவூலகத்தில் சார்பு செய்த விவரம் பணிந்து தெரிவித்தல் - சார்பு.

பார்வை : புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 6396-ஆ4-2013, நாள் 12.02.2014

***

பார்வையில் காணும் புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளில் ஒதுக்கீடு செய்துள்ளவாறு இப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக (முதுகலை) ஆசிரியர்களுக்கு தொகுப்பூதியத்திற்காக வழங்கப்பட்ட தொகை செலவின விவரம் மற்றும் அரசுக் கணக்கில் திரும்ப செலுத்திய தொகை விவரத்தினை கீழ்க்கண்ட படிவத்தில் பூர்த்தி செய்து பணிந்தனுப்பப்படுகிறது.

தலைமை ஆசிரியர்.
கையொப்பம்

இணைப்பு : படிவம்.

நகல் : மாவட்டக் கல்வி அலுவலர்.

படிவம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கல்வி மாவட்டம் | | | |
| 2. | அரசு மேல்நிலைப்பள்ளியின் பெயர் | | | |
| 3. | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆணை மற்றும் பட்டியலில் வரிசை எண் | | | |
| 4. | பெ.ஆ.க.த்தால் நியமனம் செய்யப்பட்ட மொத்த முதுகலை ஆசிரியர்கள் | | | |
| 5. | முதுகலை ஆசிரியர்கள் பாட வாரியாக எண்ணிக்கை | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| 6. | முதுகலை ஆசிரியர் பணியில் சேர்ந்த நாள் விவரம் பாட வாரியாக | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| 7. | முதுகலை ஆசிரியர் பணியாற்றி நாட்கள் பாட வாரியாக | நாட்கள் | நாட்கள் | மாதம் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| 8. | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | | ரூ. | |
| 9. | கருவூலகத்தில் இருந்து பெறப்பட்ட தொகை | | ரூ. | |
| 10. | தொகுப்பூதியத்திற்கு செலவிடப்பட்ட தொகை | | ரூ. | |
| 11. | அரசுக் கணக்கில் திரும்ப செலுத்திய தொகை | | ரூ. | |
| 12. | அரசுக் கணக்கில் திரும்ப செலுத்தியிருந்தால் சலான் எண். மற்றும் நாள் | | | |

<u>சான்று</u>

பெற்றோர் ஆசிரியர் கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக முதுகலை ஆசிரியர்களுக்காக வழங்கப்பட்ட தொகையினை உரிய முறையில் வழங்கியுள்ளேன் என்றும் மீதத் தொகையினை உரிய அரசுக் கணக்கில் செலுத்தியுள்ளேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| 13. | தலைமை ஆசிரியர் கையொப்பம் முத்திரையுடன் | |